(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 88.]

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 ஆகஸ்ட் 20, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

சமுகமளித்தோர்:

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன், குழுக்களின் பிரதித் தவிசாளர்

கௌரவ ரணில் விக்கிரமசிங்க, பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

கௌரவ வஜிர அபேவர்தன, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ ஜோன் அமரதுங்க, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கயந்த கருணாதிலக்க, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

கௌரவ ரவி கருணாநாயக்க, மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அகில விராஜ் காரியவசம், கல்வி அமைச்சர்

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல, அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

கௌரவ நவின் திசாநாயக்க, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

கௌரவ சாகல ரத்நாயக்க, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க, மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ ரஊப் ஹகீம், நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர்

கௌரவ அப்துல் ஹலீம், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கபீர் ஹஷீம், நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ பி. ஹரிசன், கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர்

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன், அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ சுஜீவ சேனசிங்க, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

கௌரவ அசோக் அபேசிங்க, போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த அலுவிஹாரே, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ லக்கி ஜயவர்தன, நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ நிரோஷன் பெரேரா, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஏ. டி. பிரேமதாச, மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ அஜித் மான்னப்பெரும, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ இரான் விக்கிரமரத்ன, நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ திலிப் வெதஆரச்சி, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ அமீர் அலி சிஹாப்தீன், கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த சேனாநாயக்க, வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ எட்வட் குணசேகர, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

கௌரவ நலின் பண்டார ஜயமஹ, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பிரதி அமைச்சர்

கௌரவ பாலித குமார தெவரப்பெரும, சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர்

கௌரவ கருணாரத்ன பரணவிதான, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ லசஷ்மன் யாப்பா அபேவர்தன

கௌரவ சிசிர குமார அபேசேகர

கௌரவ மஹிந்த அமரவீர

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ திளும் அமுணுகம

கௌரவ லஸந்த அலகியவன்ன

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ ஆனந்த அலுத்கமகே

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்

கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ வேலு குமார்

கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ சந்திம கமகே

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர

கௌரவ எஸ். எம். சந்திரசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ எஸ். பீ. நாவின்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ சனத் நிசாந்த பெரேரா

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ ஈ. சரவணபவன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய

கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்

கௌரவ கனக ஹேரத்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ ஏ. எச். எம். பௌஸி

கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. சபாநாயகரின் அறிவித்தல்கள் : பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்,—

I

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ‘மரண தண்டனையை இல்லாதொழித்தல்’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவிக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 120 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சட்டமூலமொன்றின் அரசியலமைப்புக்கு இயைபான தன்மை குறித்து தெரிவிப்பதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அரசியலமைப்புச் சார்ந்த நியாயாதிக்கம் இல்லையென்பதால் இந்த மூன்று மனுக்களையும் உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.”

II

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ‘விடுமுறை நாட்கள் (திருத்தம்)’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் ஊடாக சட்டத்திற்கு மேலதிக தெளிவு வழங்கப்படுமென உயர்நீதிமன்ற தீர்ப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்: (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2019.06.01 முதல் 2019.07.15 ஆம் திகதி வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினைச் சமர்ப்பித்து அக்குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2015 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்; மற்றும்

(ii) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மாவின் தரம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பான இடைக்கால அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஹதபிம அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான சட்டவரைஞர் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், தொழிற்சாலைகளைப் பதிவு செய்தலும் மற்றும் தொழிற்சாலைக் கட்டிடங்களை அங்கீகரித்தலும் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(ii) (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், நீராவிக் கொதிகலன்களைப் பதிவு செய்தல் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(iii) (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 34, 35, 36, 36அ, 38 மற்றும் 38அ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், நீராவிக் கொதிகலன்கள் மற்றும் வேறு அழுத்தக் கலன்களை பரிசோதனை செய்வதற்கான சான்றிதழ்களை வழங்குதல் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(iv) (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 58அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், மிகையான இரைச்சலிலிருந்து வேலையாளர்களைப் பாதுகாத்தல் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(v) (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 13 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், பொது வெளிச்சமிடுதல் நியமம் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள், கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல் : கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க சார்பாக குழு உறுப்பினர் கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன அக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட “2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்” பற்றிய அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:

(1) இம்புல்கொட, பஹல இம்புல்கொட, இல. 134/36 இல் வதியும் திருமதி எச்.டப்ளியூ. மாலனியினது 2019.05.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் மான்னப்பெரும சமர்ப்பித்தார்.

(2) (i) புஹுல்வெல்ல, கிரிந்த, பாடசாலை மாவத்தை, “கேசகி” எனும் முகவரியில் வதியும் திரு. பீ.எஸ். விதானகேயினது 2019.07.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) சேருநுவர, ஆர்.பீ. - 03, இல. 292 இல் வதியும் திரு. ஜீ. ரத்னசிறி மற்றும் ஏனைய நால்வரினது 2019.07.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) சீனக் குடா, கண்டி வீதி, 5 ஆம் கட்டை, ரேவத ஒழுங்கை எனும் முகவரியில் வதியும் திருமதி பி.ஜி. சந்திரகாந்தியினது 2019.07.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே சமர்ப்பித்தார்.

(3) (i) களுத்துறை, நாகொட, பழைய விமானநிலைய வீதி, திரு. ஏ.டி. சமிந்த குமாரவினது 2019.06.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) தெனியாய, வைத்தியசாலைக்கு அருகாமை, "புத்தி நிவஸ" எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.எஸ். பிரசங்கவினது 2019.07.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) போம்புவல, பாலயன்கொட, ரணவிரு ஜயலத் ஜயசிங்க மாவத்தை எனும் முகவரியில் வதியும் திரு. வை.யூ. உபாலி குலதுங்கவினது 2019.07.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஜயந்த சமரவீர சமர்ப்பித்தார்.

(4) களுத்துறை, ரெமுணகொட எனும் முகவரியில் வதியும் திரு. ஆர். திலகானந்தவினது 2019.06.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் 30 (10) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

5. சேர்பெறுமதி வரி (திருத்தம்) : நிதி அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 செப்டம்பர் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

6. நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) : நிதி அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 செப்டம்பர் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

7. பாராளுமன்ற அமர்வுகள் : பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 வரை இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8. அரச காணி (விசேட ஏற்பாடுகள்) : இரண்டாம் மதிப்பீடு.

சட்டமூலம் மூலம் சபையின் அனுமதியுடன் மீளப்பெறப்பட்டது.

9. புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்: அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சார்பாக அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— அமைச்சர் 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 6, 9, 17, 18 மற்றும் 25 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 204 ஆம் பிரிவின் கீழ் பாடல்கள் அல்லது இசை ரீதியான ஆக்கங்களின் உரித்தாளர்களுக்கு உரிமைத் தொகையினைச் செலுத்தும் பொறிமுறை ஒன்றினை நடைமுறைப்படுத்திக் கொள்ளல்

மற்றும் கூட்டுச் சங்கங்களை வலுவூட்டல் என்பன தொடர்பில் விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூன் 17 ஆம் திகதிய 2128/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

"கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம தலைமை தாங்குவாராக" என அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.01 மணிக்கு கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம தலைமை தாங்கினார்.)

"கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்குவாராக" என அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.00 மணிக்கு கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10. இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் : இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" என அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டு தலைமைதாங்கும் உறுப்பினரால் 53 (3) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

11. ஒத்திவைப்பு (வரட்சியினால் பாதிக்கப்பட்ட மகாவலி "எச்" வலய விவசாயிகளுக்கு நிவாரணம்): "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்குவாராக" என அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.51 மணிக்கு கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்கினார்.)

"கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்குவாராக" என கௌரவ பிமல் ரத்னாயக்க முன்மொழிய கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 6.06 மணிக்கு கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் பி.ப. 6.32 மணிக்கு, 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதி புதன்கிழமை பி. ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.